**Crl.M.P.No.1405/2025**

**<u>Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2026</u>**

**சாட்சி –1**

**பெயர் –அனாதரட்சகன் (65) த/பெ. அச்சுதன், இரும்புலி**

1. நான் இரும்புலி கிராமத்தில் வசித்து வருகிறேன். சோழங்குணம், பெரும்பூண்டி கிராமத்திற்கு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். உடையந்தாங்கல் கிராமத்தில் எனக்கு சொந்தமாக சொத்துக்கள் உள்ளது. மேற்படி நிலத்திற்கு சர்வே எண்.88/4ன் வழியாகத்தான் செல்ல இயலும். மேற்படி சர்வே எண் ஆனது கலம்புறம்போக்கு ஆகும். சுப்பிரமணி, சேகர் (எ) பூங்காவனம், சங்கர் ஆகியோர்கள் மேற்படி எனது நிலத்திற்கு செல்லும் வழியான சர்வே எண்.88/4 யை அடைத்துவிட்டனர். அதன் பேரில் நான் மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் மற்றும் செஞ்சி வட்டாச்சியர் ஆகியோர்களுக்கு புகார் அளித்தேன். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றதில் மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி பேராணை மனுவை தாக்கல் செய்தேன். அதில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் பேரில் செஞ்சி வட்டாச்சியர் அவர்கள் மேற்படி சர்வே எண்ணை தணிக்கை செய்ய மேற்குறிப்பிட்ட 3 நபர்களுக்கும் அறிவிப்பு அனுப்பி இருந்தார். அவரது விசாரணையில் மேலும் சில நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளர் என்பதன் அடிப்படையில் வட்டாச்சியர் இன்னும் சில நபர்களுக்கு அறிவிப்பு வழங்கி இருந்தார்.

2. மேற்படி எனது செயலின் மீது காழ்ப்புணர்வு கொண்டு நான் 2005ம் வருடம் கிரையம் பெற்ற நிலத்தை தவறான முறையில் கிரையம் பெற்றதாகவும், மற்றும் எனது அதிகாரத்தை பயன்படுத்தி சர்வே எண்.88/4 ல் உள்ள நிலத்தை அபகரிக்க முயற்சிப்பதாகவும் விழுப்புரம் மாவட்ட ஆட்சியரிடம் கடந்த 01.10.2024 அன்று புகார் மனுவை சுப்பிரமணி மற்றும் 9 நபர்கள் அளித்திருந்தனர். அது தொடர்பாக நான் மேற்படி புறம்போக்கு நிலத்தை அபகரித்துவிட்டதாக நாளிதழில் செய்தி வெளியானது மேற்படி விளம்பரம் என்னையும் எனது குடும்பத்தையும் மிகுந்த மனஉலைச்சலுக்கு உண்டாக்கியது. மேற்படி விளம்பரத்தை இவ்வழக்கின் பிரதிவாதிகள் தான் அளித்திருந்தனர். எனவே எனக்கும் எனது குடும்பத்திற்கும் மன உலைச்சல் மற்றும் கௌரவ குறைச்சலை ஏற்படுத்திய பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இம்மனுவை தாக்கல்

செய்துள்ளேன். எனது கூற்றிற்கு ஆதரவான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.